DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 57 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஆதியான் (P.w. 3) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025

( எதிரிகள் ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது முருகையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 16ம் தேதி 7 வதுமாதம் 2024 – 2025ம் வருடமோ ஞாபகமில்லை ஒரு நாள் நானும் அசா1, அசா2 மற்றும் எனது தங்கை ஆகியோர் எனது அப்பாவை ஆண்டி, ராமர் ஆகியோர் சேர்ந்து அதில் ஆண்டி என்பவர் கட்டையால் காலிலும், கையிலும் அடித்தார். ராமர் என்பவர் கத்தியால் எனது தந்தையின் கையில் வெட்டிக் காயத்தைஏற்படுத்திவிட்டார். மேற்படி சண்டை நடக்கும்போது நானும் எனது தம்பி குமராண்டியும், எனது தங்கையும் ஓடி வந்தோம். மேற்படி ராமனும், ஆண்டியும் வெட்டும்போதும், அடிக்கும்போதும் பார்த்தோம். பின்னர் நாங்கள்

எனது அப்பாவைஅழைத்துக் கொண்டு திருச்சுழிகாவல் நிலையத்திற்கு சென்றபோது காயத்தை பார்த்துவிட்டு அதற்கு திருச்சுழி அரசு மருத்துவமனை சென்று அதன்பின்னர் வரச் சொன்னதால் நாங்கள் மருத்துவமனை சென்று அதன்பின்பு நாங்கள் திருச்சுழி காவல் நிலையத்தில் எனது அப்பா மூலமாக புகார் கொடுத்தோம். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

எனது அப்பாவை எதிரிகள் அடித்தார்கள் என்றும் நான் ஓடி வந்தேன் என்றும் சொல்லும்போது நான் எங்கே இருந்தேன் என்றால் ரோட்டிற்கு அருகில் மண்பாதையில் போனேன் சண்டையை பார்த்து ஓடிவந்தேன். சண்டை நடக்கும் முன்பு எனது அப்பா சுத்தம் செய்யும் சமயத்தில் நானும் எனது அண்ணனும் சத்தம் செய்யும் இடத்தில் இருந்தோம் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். எனது அப்பா புகாரில் சொன்னதுபோல் எதிரிகள் யாரும் அடிக்கவில்லை என்றாலும் எனது அப்பாவின் புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, எதிரிகள் அடித்தார்கள். எனது அப்பாவிற்கு கையில் ஏற்பட்ட ரத்தக்காயத்தை தவிர வேறு எந்த ரத்தக்காயமும் கிடையாது என்றால் சரிதான், ஊமைக்காயங்கள் ஏற்பட்டது. எனது அப்பா சுத்தம் செய்ததாக சொன்ன இடம் நத்தம் புறம்போக்கு இடம் என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் மேற்படி இடம் கிடையாது என்றால் சரிதான். எனது அம்மாவின் அப்பாவின் இடம் ஆகும். எனது அப்பா சுத்தம் செய்த இடத்திற்கு அருகில் எந்த திசையில் எதிரிகள் இடம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. கட்டை எடுக்கப்பட்ட இடம் எங்கள் இடமா அல்லது எதிரிகள் இடமா என்று ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். ஆண்டிக்கு 5 ஆண் மக்கள் என்றால்சரிதான். மருத்துவமனையிலோ, புகாரிலோ நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றோம் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையம் சென்றோம். எனது அப்பா கொடுத்த

பொய் புகாரில் பொய்யான சாட்சியம் அளிப்பதால் தான் வழக்கு கோப்புகளுக்கு முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறு விசாரணை–**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 57 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | குமராண்டி (P.w. 2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025
( எதிரிகள் ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது முருகையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 16.07.2023 ம் தேதியன்று மாலை 4 மணியளவில் முருகையாபுரத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான இடத்தை ஜேசிபி வைத்து சுத்தம் செய்து கொண்டிருந்தோம். அந்த இடத்தில் நானும் அசா1 எனதுதந்தையும், எனது அண்ணன் ஆதியான், எனது தங்கை முத்துமாரி ஆகியோர் இருந்தோம். அந்த நேரம் பார்த்து ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் வந்து எங்கள் இடத்தை ஏன் சுத்தம் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு முன்பேஅந்த இடத்தை எதிரிகள் அளந்து அதன்பின் எங்களுக்கு சொந்தமான கட்டை இருந்தது. அந்த கட்டையை பிடுங்கி எங்களுக்குரிய இடத்தை சுத்தம் செய்தபோது ஏன் கட்டையை எடுத்தாய் என்று எதிரிகள் எனது அப்பாவை

கேட்டபோது ஆண்டி கட்டையால் எனது அப்பா அசா1 ஐ வலது முழங்காலுக்கு அருகே அடித்துவிட்டார். ராமர் என்பவர் கத்தி கம்பைக் கொண்டு வந்து அசா1 எனது அப்பாவை வெட்டவந்தபோது அதை எனது அப்பா தடுத்ததால் எனது அப்பாவிற்கு வலது பின்கையில் காயம் ஏற்பட்டு வீக்கம் ஏற்பட்டது. மறுபடியும் ராமன் வெட்ட வந்தபோது தடுத்ததால் வலது உள்ளங்கையில் வெட்டு காயம் விழுந்தது. அதோடு மொக்கச்சாமியும் எனது அப்பாவின் தலையில் அடித்தார். நான் இதை நேரில் பார்த்தேன். பின்னர் நாங்கள் எனது அப்பாவை இரு சக்கர வாகனத்தில் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே திருச்சுழி காவல் நிலையம் சென்றோம், அவர்கள் காயத்தை பார்த்துவிட்டு முதலில் மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். அங்கு சென்று வந்த பின்னர்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

**எ.த.கு.வி –**

நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியும். அசாஆ1 புகார் மனுவில் எனது அப்பா சண்டை நடந்தவுடன் அடிப்பதை பார்த்து நானும், எனது அண்ணனும் ஓடி வந்ததாகதான் உள்ளது, நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து சுத்தம் செய்ததாக இல்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் எனது அப்பாவிடம் சண்டை போடவில்லை என்றாலும் சம்பவத்தை பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் வேண்டும் என்பதற்காக எனது அப்பா கொடுத்துள்ள பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவுடன் சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு சென்றதாகவோ, காவல் நிலையம் சென்றதாகவோ ஆவணத்திலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது அப்பாவிற்கு உள்ளங்கையில்ஏற்பட்ட காயத்தை தவிர வேறு ரத்தக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, வேறு ரத்தக்காயம் இருந்தது. காயம் பட்ட

எனதுஅப்பா வேறு ரத்தக்காயங்கள் இல்லை என்று சொல்லும் நிலையில் நான் மிகைப்படுத்தி கூறுவதால்தான் வேறு ரத்தக்காயங்கள் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் ஆதியானுக்கு எழுதப்படிக்க தெரியும். நானும் எனது அண்ணனும் காவல் நிலைய புகாரின்போது புகார்மனுவினை எழுதவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவத்தின்போதும், மருத்துவமனையில் இருந்தபோதும் காவல் நிலையம் சென்றபோதும் என் தந்தையுடன் இல்லாத காரணத்தினால் தான் புகார் மனுவினை எழுதவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் எத்தனை பேர் அடித்தார்கள் என்று எனது அப்பா கூறினார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் வெளியே தான் இருந்தேன். எனக்கு தெரியாது. 1வது எதிரி ஆண்டிக்கு 5 ஆண் மக்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். எனது அப்பா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 57 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | மங்கையன் (P.w. 1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025

( எதிரிகள் ஆஜர் ).

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது முருகையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் எனக்கு சொந்தமான இடத்தில் உள்ள காட்டு கருவேல் முட்களை ஜேசிபி இயந்திரத்தால் வைத்து சுத்தம் செய்து கொண்டிருந்தேன். அப்போது நேரம் 4 மணி இருக்கும். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் வந்து அதில் மொக்கையன் கத்திகம்பால் என்னை வெட்ட வந்தபோது நான் தாங்கினேன். மறுபடியும் வெட்ட வரும்போது எனது வலது கை கட்டைவிரல் அருகே வெட்டு விழுந்துவிட்டது. சோணைமுத்து மகன் ஆண்டி கட்டையால் காலில் அடித்துவிட்டார். ஆண்டியின் இளைய மகன் ஆஜர் எதிரி மூன்றாவது நபர் கம்பைக் கொண்டு எனது இடது புஜத்தில் அடித்தார். இடத்து

பிரச்சனைக்காகவும், நான் சுத்தம் செய்த இடம் எதிரிகள் இடம் என்று சொல்லி மேற்கண்டவாறு தாக்கினார்கள். சண்டை நடக்கும்போது எனது மகன்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள். ஆதியான், குமராண்டி எனது இரு மகன்கள் தான் வந்தார்கள்.

2. பின்னர் நாங்கள் நேராக திருச்சுழி காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது எனது காயத்தை பார்த்துவிட்டு திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். நான் உள்நோயாளியாக இருந்து மருத்துவமனையில் இருந்து திருச்சுழி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். போலிசாரிடம் நடந்ததை சொல்லி அவர்கள் புகார் எழுத நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் மருத்துவமனையில் 1 நாள் சிகிச்சையில் இருந்து விட்டு மறு நாள் சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. நான் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக அவர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, அவர்கள் அடித்தது உண்மை. எனக்கு சொந்த ஊர் முருகையாபுரம் கிடையாது என்றால் சரிதான், எனது மாமியார் ஊர் ஆகும். எதிரிகளின் சொந்த ஊர் முருகையாபுரம் என்றால் எனக்கு தெரியாது. நான் எனக்கு சொந்தமான இடம் என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் உள்ளது. எனது பெயரில் கிரைய ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, எனது மாமா பெயரில் உள்ளது. எனது இடத்திற்கு அருகில் எதிரிகள் இடம் உள்ளது என்றால் இருக்கலாம் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. நத்தம் புறம்போக்கு இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டு எதிரிகளின் இடத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து

வருவதாகவும் அதை அவர்கள் தடுப்பதால் காழ்புணர்ச்சி கொண்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அழைக்கழிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல.

2. எதிரிகள் என்னை அடிப்பதாக சொல்லும் சமயத்தில் எனது மகன்கள் வெளியூரில் வேலை பார்த்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் அங்கு தான் இருந்தார்கள். காவல் நிலையத்திற்கு சம்பவ தினத்தன்று 4 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்திற்கு சென்றவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றேன். எதிரி மீது பொய் புகார் கொடுத்ததால் அவர்கள் மீது புகார் போலிசார் எடுக்காத காரணத்தினால் நான் மருத்துவமனை சென்று கணக்கிற்காக சிகிச்சை பெற்றதாக கூறி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியமளிப்பதுபோல் மருத்துவமனையில் ஒரு நாள் முழுவதும் சிகிச்சையில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிப்பதால் வழக்கு கோப்புகளுக்கு முரண்பாடாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் என்னிடம் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று கேட்டார்கள் அவர்களிடம் நீதிமன்றத்தில் சொன்னதைதான் சொன்னேன். மருத்துவரிடம் எத்தனை பேர் அடித்தார்கள் என்று சொன்னேன் என்றால் 3 நபர்கள் அடித்ததாக சொன்னேன். 3 நபர்களுக்கு மேல் அடித்ததாக மருத்துவரிடம் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நானாகதான் சென்றேன் என்றாலும் எனது மகன்கள் அழைத்துச் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. புகாரில் என்ன எழுதி உள்ளது எனக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். புகாரில் எனது மகன்கள் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால்சரிதான். நான் சொல்வதுபோல் புகார் கொடுக்கும்போது எனது மகன்கள் இருந்திருந்தால் புகாரில் கையொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும் அவ்வாறு மகன்கள் உடன் இல்லாத காரணத்தினால் அறிவேன் சாட்சியாக யாரும் கையொப்பம் செய்யவில்லைஎன்றால் சரியல்ல. எங்கள் வழக்கறிஞர் கையொப்பம் போட வேண்டாம் என்று சொன்னார். (சாட்சி தாமாக எனது மகன்களிடம் கேட்டபோது வழக்கறிஞர் எதுவும் சொல்லாததால்

கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னதாக சொல்கிறார்). எனது சாட்சியத்தின் படி வழக்கறிஞர் அறிவுரையின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது உள்ளங்கையில் ஏற்பட்ட காயத்தை தவிர வேறு எந்த ரத்தக்காயமும் இல்லை என்றால் சரிதான், ஊமைக்காயம் இருந்தது. எதிரியை தாக்கியவகையில் எனக்கு எந்த காயமும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டிருந்தால் அது இந்த வழக்கிற்காக எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்ட காயம் என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது உள்ளகாழ்புணர்ச்சி காரணமாக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.